தினமலர்
உண்மையின் உரைகல்

**October 08, 2013**

# மாணவர்களை கவர்ந்த வேதியியல் கருத்தரங்கம்

தேனாம்பேட்டை, அக். 8–

'வேதியியலில் நவீன போக்குகள்' என்ற தலைப்பில், கல்லூரியில் நடக்கும் கருத்தரங்கு, தங்களை வெகுவாக கவர்ந்ததாக, மாணவர்கள் கூறினர்.

சென்னை ஸ்டெல்லா மேரீஸ் கல்லூரியின் வேதியியல் துறை, இந்திய தேசிய அறிவியல் கழகம், இந்திய அறிவியல் கழகம், தேசிய அறிவியல் கழகம் ஆகியவற்றுடன் இணைந்து, 'வேதியியலில் நவீன போக்குகள்' என்ற தலைப்பில், இரண்டு நாள் கருத்தரங்கத்தை நடத்தி வருகிறது. அதில் கலந்து கொண்ட மாணவர்கள், கருத்தரங்கம், பயனுள்ளதாகவும், தங்களை மிகவும் கவர்ந்ததாகவும் கூறினர்.

நேற்றைய கருத்தரங்கில் பங்கேற்ற, இந்திய அறிவியல் நிறுவன விஞ்ஞானி சந்திரசேகரன், 'க்ளிக்ஸ்' வினைகளை பற்றி விளக்கினார்.

மருத்துவம், உயிர் வேதியியல், சூழலியல் ஆகியவற்றில், ஒரு வேதிப் பொருளை தயாரிக்க, தற்போது பயன்படுத்தப்படும் வேதி வினைகள், 50 சதவீதத்திற்கும் அதிகமான தேவையில்லாத, பல்வேறுதுணை வினை பொருட்களை உருவாக்குகின்றன.

அந்த பொருட்கள், பூமியிலும், காற்றிலும் கலப்பதால், பல்வேறு மாசுகள் உருவாகின்றன.

## 95 சதவீதம் வரை

ஆனால், 'கிளிக்ஸ்' வினைகள் மூலம், வேதிப் பொருட்களை வேதி வினைகளுக்கு உட்படுத்தும் போது, 95 சதவீதம் வரை தேவையான, வினை விளை பொருட்கள் மட்டுமே கிடைக்கும்; அதனால், சுற்றுச் சூழல் பாதிப்பு, பொருள் செலவு, கால விரயம் போன்றவற்றை தடுக்க முடியும் என, அவர் கூறினார்.

மதுரை காமராஜ் பல்கலை, வேதியியல் பேராசிரியர் காமராஜ், சூரிய ஒளியையும், 'நேனோ' துகள்களையும் நவீன வேதியியலில் பயன்படுத்தும் முறைகளை பற்றி விளக்கினார்.

---

> *சாயம் கலந்த நீரை, குறிப்பிட்ட புதுவித அமில. காரங்களை, சூரிய ஒளியில் வேதிவினைக்கு உட்படுத்தினால், சாயமும், நீரும் தனித்தனியாக பிரிந்து விடும்*

அவர், தங்கத்தில் உள்ள நேனோ துகள்கள், சூரிய ஒளி ஆகியவற்றை பயன்படுத்தி, தண்ணீரில் இருந்தும், மெத்தனாலில் (எரி சாராயம்) இருந்தும், ஹைட்ரஜனை பிரித்தெடுத்து, வாகன எரிபொருளாக பயன்படுத்தும் வழிமுறைகளையும், அதன் அவசியத்தையும் விளக்கினார்.

இந்திய அறிவியல் நிறுவன விஞ்ஞானி நடராஜன், புது வகையான அமிலங்கள், காரங்கள் ஆகியவற்றை, காலம், வெப்ப காரணிகளை, பல்வேறு நிலைகளில் உட்படுத்தி, வேதி வினைகளில் மாறுதல்களை ஏற்படுத்தும் சாத்திய கூறுகளை பற்றி விளக்கினார். சாயம் கலந்த நீரை, குறிப்பிட்ட புதுவித அமில, காரங்களை, சூரிய ஒளியில் வேதி வினைக்கு உட்படுத்தினால், சாயமும், நீரும் தனித்தனியாக பிரிந்து விடும் என, விளக்கினார்.

## இன்றும் நடக்கிறது

இந்த தொழில்நுட்பங்களை தொடர்ந்து ஆராய்ந்து, சமூக பயன்பாட்டுக்கு கொண்டு வருவதன் மூலம், அறிவியலில், பக்க விளைவுகள், கால விரயம், பொருட்செலவு உள்ளிட்டவை குறையும் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

கருத்தரங்கில், 15க்கும் மேற்பட்ட கல்லூரி பேராசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர். கருத்தரங்கம் இன்றும் நடக்கிறது. வேதியியல் மாணவர்கள் கலந்து கொள்ளலாம்.